"THE HINDU TAMIL"

PAGE NO: 07 DATE: 08.02.2021

பொது போக்குவரதது மூலம் நாடு முழுவதும்

# 34,500 கி.மீ சுற்றுப் பயணம் செய்யும் இளைஞர்கள்

● புதுச்சேரி பல்கலை. துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்தார்




▲ பொது போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் 34,500 கி.மீ சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இளைஞர்களின் பயணத்தை புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் தொடங்கி வைத்தார்.

■ புதுச்சேரி

பொதுப் போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் 34,500 கி.மீ தூரம் பயணித்து கின்னஸ் சாதனை படைக்கும் பயணத்தை இரு இளைஞர்கள் புதுச்சேரியில் தொடங்கியுள்ளனர்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் ரயில் சுற்றுலா தொடர்பாக ஆய்வு மேற்கொண்டு வரும் மாணவர் கோ.வை. திலீபன், சுற்றுலா படிப்பில் முதுநிலை படிப்பு முடித்துள்ள ஜா.ஆடம்சன்ராஜ் இருவரும் இணைந்து, பொது போக்குவரத்து மூலம் நாடு முழுவதும் 34,500 கி.மீ தூரம் பயணித்து கின்னஸ் சாதனை புரிய திட்டமிட்டுள்ளனர். இந்த சாதனை பயணத்தை நேற்று புதுச்சேரியில் இருந்து தொடங்கினர். பேருந்து நிலையத்தில் நடந்த தொடக்க நிகழ்ச்சியில் புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குர்மீத் சிங் கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

பல்கலைகழக பேராசிரியர்கள் மற்றும் இந்திய இளைஞர்களின் சங்கம் புதுச்சேரி கிளை சார்பாக துணைத் தலைவர் சரவணன், அவைத் தலைவர் எழிலன் லெபேல், செயலர் சண்முகவேலு, ஒருங்கிணைப்பு செயலர் ஆனந்தராஜன் மற்றும் வேதபுரி கிளையின் பிரேம் ஆனந்த், வேலாயுதம், தேவசேனாதிபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டு வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

இப்பயணத்தின்போது அவர்கள் இந்திய கடலோர காவல்படையின் கொடியை கொண்டு செல்கின்றனர். கரோனாவால் சுற்றுலா முடங்கியுள்ளது. அதனை மீட்டெக்க வேண்டும். பொதுப் போக்குவரத்து நெரிசல், காற்று மாசுவை குறைக்க வேண்டும். சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தும் விதமாக பொதுப் போக்குவரத்து மூலம் இந்தியா முழுவதும் 34,500 கி.மீ தூரம் பயணம் செய்து கின்னஸ் சாதனை புரிய திட்டமிட்டுள்ளனர். புதுச்சேரியில் தொடங்கியுள்ள பயணத்தை 8 விமானங்கள், 34 ரயில்கள், 18 பேருந்துகளில் பயணித்து ஏப்ரல் 17-ம் தேதி ராமநாதபுரத்தில் நிறைவு செய்கின்றனர்.

பயணத்தின்போது இவர்களுக்கு இந்திய இளைஞர் விடுதிகளின் சங்கத்தின் மூலமாக அனைத்து மாநிலத்திலுள்ள விடுதிகளின் மூலம் சிறப்பான வரவேற்பும், தங்கவும் தேசிய தலைவர் வெங்கட் நாராயணன் ஏற்பாடு செய்துள்ளார்.

"DAILY THANTHI"

PAGE NO: 10

DATE: 08.02.2021



### புதுவை பல்கலைக்கழக

# சுற்றுலாத்துறை மாணவர்கள் கின்னஸ் சாதனை பயணம்

புதுச்சேரி, பிப்.8-

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சுற்றுலாத்துறையில் படிக்கும் மாணவர்களான திலீபன், ஆடம்சன் ராஜ் ஆகியோர் பொது போக்குவரத்தில் நீண்ட தூர பயணம் என்ற கின்னஸ் சாதனை முயற்சியாக இந்தியாவில் உள்ள 23 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் 10 வாரங்களில் பஸ், விமானம், ரெயில்கள் மூலமாக 34 ஆயிரத்து 500 கிலோ மீட்டர் பயணத்தை மேற் கொண்டுள்ளனர். இவர்கள் நேற்று காலை புதுவை புதிய பஸ் நிலையத்தில் இருந்து தங்களது சாதனை பயணத்தை தொடங்கினர்.

நிகழ்ச்சியில் பல்கலைக்கழக துணைவேந்தர் குர்மீத் சிங் கலந்து கொண்டு திலீபன், ஆடம்சன் ராஜ் ஆகியோருக்கு சால்வை அணிவித்து வாழ்த்தி வழி அனுப்பினார். பஸ் நிலையத்தில் இருந்து அரசு பஸ் மூலம் சென்னை சென்ற அவர்கள் அங்கிருந்து விமானத்தில் அகமதாபாத் சென்றனர். இந்த சாதனை பயணம் ஏப்ரல் 17-ந் தேதி ராமேசுவரத்தில் நிறைவடைகிறது. இந்த மாணவர்களுக்கு இந்திய இளைஞர் விடுதிகளின் சங்கத்தின் மூலமாக அனைத்து மாநிலத்தில் உள்ள விடுதிகளில் தங்க அதன் தேசிய தலைவர் வெங்கட் நாரராயணன் ஏற்பாடு செய்துள்ளார்.

தொடக்க நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் அம்ரேஷ் சமந்திரயா, சந்திரசேகர ராவ், இளைஞர் விடுதிகளின் மாநில கிளை துணைத்தலைவர் சரவணன், அவைத்தலைவர் எழிலன் லெபோல், போலீஸ் சூப்பிரண்டு மாறன் ஆகியோர் கலந்து கொண்டனர்.